Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 126 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 08.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# பொருளாதார லட்சியத்தை நிறைவேற்றப்போவது பெண்கள்தான்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



சென்னை: 'அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம். ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு எனும் என் லட்சியக் கனவை முன்னின்று நிறைவேற்றப் போவது பெண்கள்தான்' என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'உலகை இயக்கும் பேராற்றலான என் அன்புக்குரிய தாய்மார்கள், சகோதரிகள் அனைவருக்கும் இனிய உலக மகளிர் நாள் வாழ்த்துகள். "பெண் ஏன் அடிமையானாள்?" எனக் கேள்வியெழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் பெரியார். அவரது கொள்கை வழித்தோன்றலாககருணாநிதி பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை அளித்துச் சட்டம் நிறைவேற்றினார், அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு அளித்தார். இத்தகைய பெண்ணினக் காவலர்களின் வழியிலான நமது திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியையே மகளிரின் உயர்வுக்கான ஆட்சியாக நடத்தி வருகிறது.

பெண்கள் சுதந்திரமாக ஓரிடத்தில் இருந்துமற்றோர் இடத்துக்குச் சென்று வர விடியல்பயணம்,அவர்களின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் மகளிர் உரிமைத்திட்டம், அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் புதுமைப்பெண், அவர்களின் சமையல் சுமையைக் குறைக்கும் காலை உணவுத் திட்டம், அவர்கள் பாதுகாப்பாகத் தங்கத் தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட விழுக்காட்டில் பணியிடங்கள் ஒதுக்கீடு, பெண்களின் பெயரில் சொத்துப்பதிவு செய்தால் பதிவுக்கட்டணத்தில் சலுகை,

14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாகக் கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசி, ஆதிதிராவிட – பழங்குடியினப் பெண்களுக்கான நன்னிலம் நிலவுடைமைத் திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புக்காக உலக வங்கியுடன் இணைந்த TN–WESAFE திட்டம், கிராமப் புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் TN–RISE திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு மகளிர், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்.

அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத் தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், 2 ஆயிரம் ரூபாயைக் கோடைக்காலச் சிறப்பு நிதியாகவும் தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி மகளிரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்துஅவர்கள் மனம் மகிழச் செய்துள்ளோம்.பெண்கள் சுதந்திரமாக ஓரிடத்தில் இருந்துமற்றோர் இடத்துக்குச் சென்று வர விடியல்பயணம்,அவர்களின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் புதுமைப்பெண், அவர்களின் சமையல் சுமையைக் குறைக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அவர்கள் பாதுகாப்பாகத் தங்க,தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட விழுக்காட்டில் பணியிடங்கள் ஒதுக்கீடு, பெண்களின் பெயரில் சொத்துப்பதிவு செய்தால் பதிவுக் கட்டணத்தில் சலுகை,14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாகக் கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசி, ஆதிதிராவிட –பழங்குடியினப்பெண்களு க்கான நன்னிலம் நிலவுடைமைத் திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புக்காக உலக வங்கியுடன் இணைந்த தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்(TN–WESAFE) திட்டம், கிராமப் புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் TN–RISE திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு மகளிர், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்.

அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத் தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், 2 ஆயிரம் ரூபாயைக் கோடைக்காலச் சிறப்பு நிதியாகவும் தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி மகளிரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்துஅவர்கள் மனம் மகிழச் செய்துள்ளோம். தரமான கல்வியும், உயர் வேலைவாய்ப்புகளும் தன்னிறைவும், பொருளாதாரச் சுதந்திரமும், அனைத்துக்கும் மேலாக சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம். ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு எனும் என் லட்சியக் கனவை முன்னின்று நிறைவேற்றப் போவது நீங்கள்தான். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது மகளிர் நாள் நல்வாழ்த்துகள்' எனத் தெரிவித்துள்ளார்.

# கோவை மாணவி பாலியல் வழக்கு: 3 பேருக்கும் வாழ்நாள் சிறை தண்டனை; நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு







கோவை கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேருக்கு வாழ்நாள் சிறை தண்டனை விதித்து என கோவை மகிளா நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு கூறினார். கோவை பீளமேட்டில் காதலருடன் காரில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்த கல்லூரி மாணவி கடந்தஆண்டு நவம்பர் மாதம் 2ம் தேதி வாலிபர்கள் 3 பேரால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைசேர்ந்தகருப்பசாமி (30), அவரது சகோதரர் காளீஸ்வரன்(21), மதுரையை சேர்ந்த அவர்களது உறவினர் தவசி(20) உள்ளிட்ட 3 பேரை போலீசார் காலில் சுட்டுப்பிடித்து கைது செய்தனர். அவர்கள் கோவைமத்தியசிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த வழக்கு, தற்போது கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. தமிழக முதல்வர் மு.க . ஸ்டாலின் இந்த வழக்கில் சம்பவம் நடந்த ஒரு மாதத்துக்குள் குற்றப்பத்திரிகைதாக்கல் செய்யவும், விரைவில் இந்த வழக்கை முடிக்கவும் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, மூவர் மீதும் 250 பக்க குற்றப்ப த்திரிகை கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. 72 பேரிடம் சாட்சி விசாரணை நடந்தது. வாதங்களும் கடந்த மாதம் 27ம் தேதி முடிவடைந்தது.தொடர்ந்து மார்ச்7ம்தேதி(இன்று) இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதி சுந்தராஜன் அறிவித்தார். மகளிர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வாசிக்கப்பட்டது. முன்னதாக பலாத்கார வழக்கில் தொடர்புடைய கருப்புசாமி, காளீஸ்வரன், தவசி ஆகியோரை, கோவை மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த போலீசார் இன்று பலத்த பாதுகாப்புடன் பிற்பகல் அழைத்து வந்தனர். பின்னர் கோர்ட்டில் 3 பேரும் ஆஜர்படுத்தப்பட்டு கதவுகள் மூடப்பட்டன. பின்னர் 2.05 மணியளவில் நீதிபதி சுந்தராஜன் கோர்ட் அறைக்கு வந்தார். பின்னர் அவர் தீர்ப்புகளை வாசிக்கத் தொடங்கினார்.

முதலில் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கருப்புசாமி, காளீஸ்வரன், தவசி ஆகிய 3 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பு கூறி விட்டு மாலை 3 மணிக்கு மேல் தண்டனை உள்ளிட்ட முழு தீர்ப்பு விவரம் கூறப்படும் என நீதிபதி சுந்தரராஜன் அறிவித்து விட்டுநீதிமன்றஅறையிலிருந்து சென்றார். தீர்ப்பு வழங்கப்படுவதை தொடர்ந்து கோர்ட் வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இந்நிலையில், கூட்டு பாலியல் என்ற பிரிவில் மூன்று பேருக்கும் வாழ்நாள் சிறை தண்டனை விதித்து நீதிபதி அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குற்றவாளிகள் சதீஷ் (30), கார்த்திக் (21), தவசி (20) ஆகியோருக்கு சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டு ள்ளது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.7 லட்சம் இழப்பீடு தர வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணின் நண்பருக்கு ரூ.2 லட்சம் இழப்பீடு தர அரசுக்கு கோவை மகிளா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஒரு பவுன் தங்கம், மகளிருக்கு மாதம் ரூ.2500 அறிவிப்புகளை வெளியிட்ட தவெக தலைவர் விஜய்



மாமல்லபுரத்தில் தவெக சார்பில் நடைபெற்று வரும் மகளிர் தினவிழாவில்வாக்குறுதிகளை வெளியிட்டு வருகிறார் அக்கட்சி தலைவர் விஜய். அவர் வெளியிட்ட வாக்குறுதிகள் இங்கே...

பெண்கள், குழந்தைகளுக்கு, முதியோருக்கு என தனி இலாகா உருவாக்கப்படும். அது எனது நேரடி கண்காணிப்பில் இருக்கும். 60 வயது இருக்கும் பெண்கள் அனைவருக்கும் மாதம் ரூ.2500 கொடுக்கப்படும். அரசு வேலைவாய்ப்பில் இருக்கும் பெண்களைத் தவிர மற்றவர்களுக்கு வழங்கப்படும்.

அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு 6 கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும்.

பெண்களின் திருமணத்திற்கு ஒரு பவுன் தங்கம், தரமான பட்டு சேலை அண்ணன் சீராக வழங்கப்படும்.

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பள்ளிக் கல்வி இடைநிற்றல் இல்லாமல் செய்வதற்காகதாய் அல்லது பாதுகாவலர்களுக்கு ஆண்டுக்கு ரூ.15,000 உதவித்தொகை வழங்கப்படும்.

வெற்றி பயணம் திட்டமாக அனைத்து அரசு பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணிக்கலாம்.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ராணி வேலுநாச்சியார் படை உருவாக்கப்படும். மாநிலம் முழுவதும் 500 குழுக்கள் உருவாக்கப்பட்டு பெண்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அவசர நிலைகளை கண்காணிக்க அதிநவீன கட்டளை மையங்கள் அமைத்து பெண்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார். பெண்களுக்கு மிகவும் தேவையான நாட்களில் பொது வினியோகம் நடக்கும் இடங்களான ரேஷன் கடைகள், பள்ளிகள், கல்லூரிகள் மூலம் அனைத்து பெண்களுக்கும் விலை இல்ல சானிட்டரி PADS வழங்குவது உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார். ஐந்து லட்ச ரூபாய் வரை பெண்களுக்கு வட்டி இல்லா நிதி வழங்கப்படும் என்று தெரிவித்தார். தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அரசாங்கத்தின் ஆசிர்வாதமாக தாய்மாமன் சீர் என்ற பெயரில் தங்க மோதிரம் வழங்கப்படும் என்றும் பேபி வெல்கம் கிட் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். சுய உதவி குழுக்கள் மூலம் ரூ.5 லட்சம் 100 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் மூலம் தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்குமோதிரம் வழங்கப்படும்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



காரைக்குடி நாடார் உறவின் முறைக்கு உட்பட்ட அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று மிக விமரிசையாக நடைபெற்றது.கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர். இதையொட்டி கோயிலில் சிறப்பு பூஜைகள்நடைபெற்றதுடன், பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கப்பட்டது.இந்தநிகழ்வால் கோயில் வளாகம் முழுவதும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

# தென்காசி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 7127 பயனாளிகளுக்கு ரூ.44.05 கோடி மதிப்பிலான உதவிகள்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 6.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 32 திட்டப்பணிகளைதிறந்து வைத்து, 55.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 7,127 பயனாளிகளுக்கு 44.05 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் 5.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 30 திட்டப்பணிகள், பேரூராட்சிகள் துறையின் 22.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 1 திட்டப்பணி, சுகாதாரத் துறையின் 45.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 1 திட்டப்பணி என மொத்தம் 6.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 32 திட்டப்பணிகளைதிறந்து வைத்தார்.

தொடர்ந்து ஊரக வளர்ச்சிமற்றும்ஊராட்சித் துறையின் சார்பில் 42.62கோடி ரூபாய் மதிப்பீட்டில் 180 புதிய திட்டப்பணிகள், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 5.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 புதிய திட்டப்பணி, பொதுப்பணித்துறையின் சார்பில்5.69கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகள் என மொத்தம் 55.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 500 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 1,000 பயனாளிகளுக்கு 3.50 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 204 பயனாளிகளுக்கு 18.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை விற்பனை மற்றும்வேளாண் வணிகத் துறையின் சார்பில் 8 பயனாளிகளுக்கு 39.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு 4.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு 7.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 1,000 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 629 மாற்றுத்திறனாளிகளுக்கு 1.80 கோடி ரூபாய் மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், சக்கர நாற்காலிகள், காதொலி கருவிகள் உள்ளிட்ட உதவி உபகரணங்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு 15.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சமூக நலத்துறையின் சார்பில் 105பயனாளிகளுக்கு5.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 95 பயனாளிகளுக்கு 1.39 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 3,500 மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு 35.35கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 67 பயனாளிகளுக்கு 29.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், முன்னோடி வங்கியின் சார்பில் 4 பயனாளிகளுக்கு கல்வி கடன் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 7,127 பயனாளிகளுக்கு 44.05 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார், ஈ.ராஜா, மரு. தி.சதன்திருமலைக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் முன்னாள் சபாநாயகர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மரு.பூங்கோதை ஆலடி அருணா, மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன், நகராட்சி உறுப்பினர் வே. ஜெயபாலன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் கணிதவியல் துறை மன்ற விழா



அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் கணிதவியல்துறைமன்ற விழா 06.03.2026 அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் கணிதவியல் பேராசிரியர் முனைவர் ரூப்குமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கணிதத்தின் பயன்பாடுகள் குறித்தும், இத்துறையில் இருக்கும் வேலை வாய்ப்புகள் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

கணிதமன்றம்சார்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக கணிதத் துறை தலைவர் முனைவர் பாலசுப்ரமணியன் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து முனைவர் கவிதா சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

விழாவின் நிறைவாக கணித மன்ற முதுநிலை செயலாளர் செல்வி. பிரின்சி நன்றியுரை வழங்கினார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



### ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம்

# கோவிந்தப்பேரி ஊராட்சி ராஜாங்கபுரத்தில் புதிய பகுதி நேர கடை திறப்பு விழா

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் கோவிந்தப்பேரி ஊராட்சி ராஜாங்கபுரத்தில் புதிய பகுதி நேர கடை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஒன்றிய கவுன்சிலர் ஜெயக்குமார் அவர்கள் தலைமை தாங்கினார்கள் நிகழ்ச்சிக்குகிளைக் கழக செயலாளர் மூக்கையா ,இசக்கி பாண்டி ஆகியோர் முன்னிலை வகி த்தனர் விவசாய அணி அமைப்பாளர் எல்என்டி முருகன் அவர்கள் வரவேற்று பேசினார் ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் நிதி யில் இருந்து கட்டப்பட்ட கட்டிடத்தை முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் திறந்து வைத்தார்கள் பகுதி நேர ரேஷன் கடை பெற்று தருவோம்அதன் பின்னர் கட்டிடம் திறக்கப்படும் என்று சொல்லி தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு அரசாணை பிறப்பித்து மலைப்பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் ராஜாங்கபுரம் கடைக்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கிடைக்கும் சிறப்பு அனுமதி வழங்கி வாரத்தில் ஒரு நாள் சனிக்கிழமை குடி மைப் பொருட்கள் வழங்கப்படும் என்கிற உத்தரவை வழங்கினார்கள்

புதிய கட்டிடம் திறக்கப்பட்ட கட்டிடத்தில் புதிய பகுதி நேர கடை ஆரம்பிக்கப்பட்டு பொதுமக்களுக்கு அரிசி சீனி வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் இளைஞர் அணி சதாம் உசேன் கிளைச்செயலாளர்கள் முக்கையா, இசக்கி பாண்டி, கிருஷ்ணன் ராஜ்குமார், ராஜா நாகராஜன் பிஸ்தா முருகன் காளிமுத்து உலகநாதன் கார்த்திக் வேலு சம்மங்குளம்ஊராட்சி மன்ற தலைவர் ஜன்னத் சதாம் உசேன்மந்தியூர்ஊராட்சி மன்ற தலைவர் கல்யாணசுந்தரம் மேல ஆம்பூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வின்சென்ட். முருகன்

மகேஷ் பாண்டியன், தென்கால் நீர்ப்பாசன கமிட்டி தலைவர் மாரியப்பன்.ரவிக்குமார் முத்தையா வேலையா விஜயன்.ஒன்றிய கவுன்சிலர்கள் ஜஹாங்கீர்.சங்கர் மாவட்ட ஒட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியாஜெய்சிங்,கடையம் ஊராட்சி ஒன்றிய அட்மா சேர்மன் குணசீலன் விடியல் ஆர்த்தி ராஜபாண்டி குணா மாவட்ட பிரதிநிதி அன்பழகன்மாவட்டபிரதிநிதி துனபான்டி சிவ சக்தி ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# கேரள அரசு பேருந்தில் பயணம் செய்த இளம் பெண்ணிடம் பாலியல் சீண்டல் ஈடுபட்ட நடத்துனர்

## நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்




தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே உள்ள கொட்டாங்குளம் பகுதியை சேர்ந்த 25-வயது இளம்பெண் ஒருவர் தனது ஊரில் இருந்து தென்காசி புதிய பேருந்து நிலையம் நோக்கி சென்ற கேரளா அரசு பேருந்தில் ஏறி பயணம் செய்துள்ளார்.

அப்போது கேரளா அரசு பேருந்து நடத்துனரிடம் அந்த இளம் பெண் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு பயணச்சிட்டு கேட்டுள்ளார். அப்போது நடத்துனர் அந்த இளம்பெண்ணிடம் அத்து மீறி பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. இதனை தட்டி கேட்ட இளம்பெண் மற்றும் பயணிகளிடம் தகாத வார்த்தையில் பேசியதாகவும் கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட அந்த இளம்பெண் பேருந்தில் இருந்து பாதியிலேயே இறங்கி தனது உறவினருக்கு செல்போனில் தொடர்பு கொண்டு நடந்தவற்றை கூறியுள்ளார்.

அதன் பின்னர் இளம்பெண் தனது உறவினான சித்தப்பாவுடன் புதிய பேருந்து நிலையத்திற்கு சென்ற நிலையில் அங்கிருந்த நடத்துனரிடம் நடத்தது பற்றி கேட்டபோது நடத்துனரே அந்த இளம்பெண் மற்றும் அவரது உறவினர் இருவரையும் தகாத வார்த்தை பேசியுள்ளார். இவருக்கும் இடையே வாக்கு வாதம் முற்றிய நிலையில் இரண்டு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுதுள்ளது. அப்போது பேருந்து நிலையத்தில் இருந்த பயணிகள் இருவரையும் சமாதானம் செய்து அங்கிருந்து அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட அந்த இளம்பெண் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட பெண் தனது நேர்ந்த சம்பவத்தை போன்று சக பெண் பயனாளிகளுக்கு நேரக்கூடாது என்றும் இதனால் மாவட்ட காவல்துறையினரும் நிர்வாகமும்தமிழகஅரசும்உரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எனபாதிக்கப்பட்ட அந்த இளம்பெண் கோரிக்கை வைத்துள்ளார்.



கண்காட்சிக்கு வந்தவர்களை பள்ளி ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார்.சிவகங்கை மாவட்ட ஆல் தி சில்ட்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். அ . மு . மு . அறக்கட்டளை அறிவியல் பயிற்சியாளர் அரங்குலவன் கண்காட்சியை துவக்கி வைத்தார். இளம் வயது மாணவர்கள் ஏராளமான அறிவியல் சோதனைகளை செய்து காண்பித்து அசத்தினார்கள். ஆல் தி சில்ட்ரன் உதவியாளர் மைக்கேல் உட்பட ஏராளமான பொது மக்கள் கண்காட்சியை பார்வையிட்டனர். சிறப்பாக செய்து காண்பித்து பாராட்டு பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.நிறைவாக ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி கூறினார்.

# ரோட்டரி கிளப் ஆப் தேனி இரிட்டேட் இன்ஸ்பர்ஸ் அண்ட் குருதி மையம் இரத்ததான முகாம்



அரசு தேனி மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை இணைந்து வழங்கும்தமிழகமுதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு இரத்ததான முகாம் நடைபெற்றது. ஆராகேஷ் நந்தன். ரோட்டரி கிளப் ஆப் தேனி யுனைடெட் சாப்டர் பிரசிடெண்ட் முன்னிலையில் தலைமை டாக்டர் பாண்டி தேவி. KSK ஆஸ்பத்திரி சேர்மன் தலைமையில் ரத்ததான முகாம் கே எஸ் கே ஆஸ்பத்திரி வளாகத்தில் நடைபெற்றது இதில் பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கினார்கள். மக்களை காக்கும் முதல்வரை போல உயிர்களைக் காக்கும் ரத்ததான முகாம். இந்த நிகழ்ச்சியில். டாக்டர் பிரியா அரசு செய்தி மருத்துவகல்லூரி பேண்ட் சென்டர் மெடிக்கல் ஆபிசர் கலந்து கொண்டு அனைவருக்கும் சர்டிபிகேட் வழங்கப்பட்டது.. மற்றும் ரோட்டரி கிளப் தேனி லிமிடெட் சேப்டர் ப்ரெசென்ட் ஆர் ஆகாஷ் நந்தன் மற்றும் கே எஸ் கே ஹாஸ்பிடல் சேர்மன் வி. கலாதேவி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது .நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு தேனி கே எஸ் கே ஹாஸ்பிடல் மகளிர் நலம் மற்றும் கருத்தரிப்பு சிறப்பு மருத்துவர்தாய்மைகருத்தரிப்பு மையம் நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்கள் பணியாளர்கள்..ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.



தென்காசி மாவட்டம் கருவந்தாவில் பனைத்தொழிலாளர் சங்கம் மற்றும் அதிமுக பனை பாதுகாப்பு அணி சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாள் நாள் விழா மற்றும் பனைத்திருவிழா நடந்தது விழாவிற்கு பனை பாதுகாப்பு அணி, மாநிலத் தலைவர் பனை தொழிலாளர் சங்க நிறுவனர் வைரக்கன் தலைமை வகித்து பள்ளி மாணவ மானவியர்க்கு நோட்டு, புத்தகம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்முன்னாள்அவைதலைவர்முருகன், பொருளாளர்சவரிமுத்து, சுப்பிரமனியன், கிருஷ்ணசாமி, சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# கோவை காந்திபுரம் 100 அடி சாலையில் உள்ள திரையரங்குக்கு, ஜல்லிக்கட்டு காளையுடன் தியேட்டருக்கு வந்த ரசிகர்கள்

## ஜல்லிக்கட்டு காளைக்கு பூஜைகள் செய்து வழிபாடு நடத்தினர்

கோவை காந்திபுரம் 100 அடி சாலையில் உள்ள திரையரங்குக்கு, ஜல்லிக்கட்டு காளையுடன் தியேட்டருக்கு வந்த ரசிகர்கள்! ஜல்லிக்கட்டு கோவையைச் சேர்ந்த ரசிகர்கள் ஒருபடி மேலே சென்று, உண்மையான ஜல்லிக்கட்டு காளை ஒன்றை அலங்கரித்து தியேட்டருக்கு அழைத்து நடிகர் விமலுக்கு நீண்ட இடைவேளைக்குப் பிறகு ஒரு ஆக்ஷன் கலந்த எதார்த்தமான படம்கிடைத்துள்ளதாகக் கூறி ரசிகர்கள் உற்சாக



காலைக்கு பூஜைகள் செய்து வழிபாடு நடத்தினர்.

நடிகர் விமல் நடிப்பில், ஜல்லிக்கட்டு மற்றும் வடமாடு விளையாட்டை மையமாக வைத்து உருவாகியுள்ள 'வடம்' திரைப்படம் இன்று கோவையில் பிரம்மாண்டமாக வெளியானது.

இந்தப் படத்தின் வெளியீட்டை முன்னிட்டு, கோவை ரசிகர்கள் செய்த செயல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

வழக்கமாகத் திரையரங்குகளில் ரசிகர்கள் தாரைதப்பட்டை முழங்க, பாலாபிஷேகம் செய்து கொண்டாடுவது வழக்கம். ஆனால், 'வடம்' திரைப்படத்தின் கதைக்களம் ஜல்லிக்கட்டைப் பற்றியது என்பதால், வந்தனர்.

கோவைநூறடிசாலையில் உள்ள திரையரங்கில் வடம் பட வெளியீட்டை மேள தாளம் முழங்க திருவிழாவாக ரசிகர்கள் கொண்டாடினர்..

இதனிடையே படம் வெளியாகி உள்ள தி'ரையரங்க வளாகத்திற்கு ஜல்லிக்கட்டு காளையை அழைத்து வந்த ரசிகர்கள் அந்தக் காளைக்கு மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்தும் வழிபாடு செய்து ரசிகர்கள் மரியாதை செய்தனர்.

ஜல்லிக்கட்டின் ஒரு வகையான 'வடமாடு' விளையாட்டைப் போற்றும் வகையில் இந்தப் படம் அமைந்துள்ளதால், ரசிகர்கள் காளையுடன் வந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். முழக்கமிட்டனர்.

இயக்குநர் கேந்திரன் இயக்கத்தில் ராஜசேகர்,வெங்கடேஷ்வரன் மற்றும் பிரபு ஆகியோர் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தத் திரைப்படத்தில், ஜல்லிக்கட்டு காளைகளின் முக்கியத்துவம் மற்றும் கிராமிய வீர விளையாட்டுகளைப் பற்றிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன. படப்பிடிப்புதொடங்கும்முன்பே பொள்ளாச்சி ஆனைமலை மாசாணியம்மன் கோவிலில் விமல் வழிபாடு நடத்தியது குறிப்பிடத்தக்கது.

திரையரங்கு வளாகத்திற்குள் காளையுடன் ரசிகர்கள் வந்த வீடியோ மற்றும் புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருவதுகுறிப்பிடதக்கது..



## தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.136 கோடி மதிப்பீட்டில்

# புதிய மருத்துவமனை கட்டிடத்தை துணை முதலமைச்சர் உதயநிதி திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று காலை 9.30மணிக்குதூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.136 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்தினை திறந்து வைத்தார்.பின்னர் காலை 10.00 மணிக்குதருவைமைதானத்தில் நடை பெற்ற அரசு விழாவில் 3958பயனாளிகளுக்கு ரூ.110,66,34,447 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசுகையில்: 99 சதவீதம் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம். சொல்லாத வாக்குறுதிகளையும் செய்துள்ளோம். நாங்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக மக்களை சந்தித்து வருகிறோம். முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள்,அமைச்சர் என அனைவரும் களத்தில் இருக்கிறோம்.

இந்நிகழ்ச்சியில் சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன், மீன்வளத்துறைஅமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சி தலைவர் இளம் பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம். சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் G.V.மார்கண்டேயன் ஆகியோர் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உள்ள அருள்மிகு சக்தி விநாயகர் கோவிலில் சங்கடகர சதுர்த்தியை முன்னிட்டு அபிஷேக ஆராதனை நடைபெற்றது அப்பொழுது மூலவர் சக்தி விநாயகருக்கு அபிஷேக பொடி, பால், தயிர், இளநீர், தேன், பன்னீர், விபூதி, சந்தனம் உட்பட பல்வேறு வகையான வாசனை திரவியங்கள் மூலம் மகா அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சக்தி விநாயகர் வெள்ளி கவசத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார் அப்பொழுது மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது அப்பொழுது அங்கு இருந்து ஏராளமான பக்தர்கள் சக்தி விநாயகரை வழிபட்டனர்.

# கோவையில் சர்வதேச ஜவுளி இயந்திரங்கள், உதிரிபாகங்கள், துணைக்கருவிகளின் கண்காட்சியின் துவக்க விழா!




கோவை கொடிசியா தொழில் கண்காட்சி வளாகத்தில் தென்னிந்திய மில்கள் சங்கமான சைமா சார்பில், சர்வதேச ஜவுளி இயந்திரங்கள், உதிரிபாகங்கள் கண்காட்சி டெக்ஸ்பேர் 2026 துவங்கியது. நான்கு நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியானது மார்ச் 6ம் தேதி முதல் மார்ச் 9ம் தேதி வரை,காலை 10மணி முதல் மாலை 6மணி வரை, நடைபெறுகிறது.கண்காட்சியைராம்கோகுழுமத்தின் தலைவர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பின் தலைவர் அஷ்வின் சந்திரன் தொடக்க விழாவிற்கு தலைமை தாங்கினார். மத்திய எம்எஸ்எம்இ அமைச்சகத்தின் இயக்குனர் சுரேஷ் பாபுஜி மற்றும் ஷலீன் தோஷ்னிவால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கண்காட்சியை கண்டு ரசித்தனர்.

தொடர்ந்து சைமா துணைத் தலைவர் கிருஷ்ணகுமார் இக்கண்காட்சி குறித்து கூறுகையில், டெக்ஸ்ஃபேர் 2026 கண்காட்சியில், 240 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் உள்ளிட்ட பல மாநிலங்களிலிருந்தும், சில யூனியன் பிரதேசங்களிலிருந்தும் நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளன. மேலும் ஸ்விட்சர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, ஜப்பான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. மொத்தம் 258 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியை சுமார் ஒரு லட்சம் பேர்பார்வையிடுவார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது என தெரிவித்தார். இந்த கண்காட்சியில் சைமா தலைவர் துரை பழனிசாமி,

சைமா துணைத் தலைவர் கிருஷ்ணகுமார், இந்திய டெக்ஸ்டைல் இயந்திர உதிரிபாகங்கள் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் கனகராஜ், சைமா இணை தலைவர்சிவராஜ்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.



# கேளம்பாக்கத்தில் 300 பெண்களுக்கு மானிய விலையில் ஆட்டோ வழங்கும் விழா

## அமைச்சர் தா மோ அன்பரசன் வழங்கினார்

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம், கேளம்பாக்கம் ஊராட்சியில், வெல்லும் தமிழ் பெண்கள் திட்டத்தின் மூலம் மானிய விலையில் ஆட்டோ வழங்கும் நிகழ்ச்சி கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் ஏற்பாட்டில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலரும், திருப்போரூர் ஒன்றிய குழு பெருந்தலைவருமான எஸ் ஆர் எல் இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது தலைமை பொதுக்குழு உறுப்பினர் அன்புசெழியன் திருப்போரூர் சட்ட மன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் லயன் எக்ஸ்பிரஸ் எல்லப்பன் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வீர பெண்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிற்சங்க செயலர் மீனாட்சி வரவேற்புரை வழங்க சிறப்பு விருந்தினராக காஞ்சி வடக்கு மாவட்ட செயலரும்,குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா மோ அன்பரசன் பங்கேற்று தமிழ் பெண்கள் திட்டத்தின் மூலம் 300 பெண்களுக்கு மானிய விலையில் ஆட்டோ மற்றும் வெல்லும் தமிழ் பெண்கள் விருதை வழங்கினார். முதல்வர் மு க ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை தொடர்ந்து நடைபெற்றயூ-25 இளையோர் கிரிக்கெட் கோப்பை பரிசளிப்பு விழாவும் நடந்தது.இதில், வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகையுடன் பரிசு கோப்பை வழங்கப்பட்டது. விழாவில், காஞ்சிபுரம் எம்.பி., செல்வம், தி.மு.க., திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலர் வழக்கறிஞர் பையனூர் சேகர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் வெண்பேடு ரமேஷ் வார்டு உறுப்பினர்கள் உட்பட மாவட்ட ஒன்றிய திமுக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் என பலர் கலந்துக்கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே

# எலப்பாக்கம் மதூர் ஊராட்சியில் கலையரங்கத்தை மாநில செயலாளர் ச.நடராசன் திறந்து வைத்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சறுப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட எலப்பாக்கம் மதூர் ஆகிய கிராமங்களில் பாரதிய ஜனதா கட்சியின் பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் ஆசியோடும் மாநிலத் தலைவர்திருநயினார்நாகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் திரு டாக்டர் பிரவீன் குமார் மாநில செயற்குழு உறுப்பினர் வி பலராமன் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் ஒன்றிய கவுன்சிலர் திரு ரேவதி பலராமன் நிதியிலிருந்து கலையரங்கம் மற்றும் மதூரில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு கிராம பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது மாநில செயற்குழு உறுப்பினர் திரு சா நடராஜன் அவர்கள் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொதுச் செயலாளர் திரு பாலாஜி அவர்கள்தெற்குமாவட்ட செயலாளர் ரா. முருகன் அவர்கள் ஐ டி விங் மாவட்டத் தலைவர் பிரபு அவர்கள் வடக்கு மண்டல் தலைவர் திரு சண்முகம் அவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள் திரு கமலநாதன் திரு ஏழுமலை திரு துரைராஜ் முன்னாள் ஒன்றிய தலைவர் திரு பாஸ்கர் ஊராட்சித் துறை மண்டல் தலைவர் திரு கந்தசாமி ஒன்றிய இளைஞரணி தலைவர் திரு ஜெயபிரகாஷ் திருமதி உமா செல்வம் வரவேற்புரை திரு சுப்பிரமணியம் ஆசிரியர் திரு சக்கரபாணி திரு விநாயகம் கிராம நிர்வாக அலுவலர் ஜென்சி எலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் திரு ஆதிலட்சுமி கோவிந்தராஜ் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது



கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தாலுகா இனையம் புத்தன்துறை பஞ்சாயத்து சார்பாக இனையம் ஊரில் செல்லும் அனைத்து குடிநீர் குழாயும் அடிக்கடி உடைந்து நீர் வீணாகி வருவதை கண்டு கொள்ளாத பஞ்சாயத்து நிர்வாகிகள் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர்தாலுகாஇனையம்புத்தன்துறை பஞ்சாயத்து சார்பாக இனையம் ஊரில் செல்லும் அனைத்து குடிநீர் குழாயும் அடிக்கடி உடைந்து நீர் வீணாகி வருவதை கண்டு கொள்ளாத பஞ்சாயத்து நிர்வாகிகள் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# பஞ்ச் டயலாக்'களைப் பேசி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்

## சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு

தி.மு.கதலைவரும்தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகரம் 39வது வார்டு சண்முகபுரம் பகுதி சார்பில் தேரடி அருகில் நடைபெற்ற தி.மு.கஆட்சியின்சாதனை விளக்கதெருமுனைபிரச்சாரகூட்டத்திற்குஅமைச்சர் கீதாஜீவன் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் ஏ.பி.சி.வீ.சண்முகம்,மாநகர தி.மு.க செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 39வது வார்டு பொறுப்பாளர் சக்திவேல் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்;

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற போது கொரோனா காலக்கட்டம் அதற்கு முன்பு இருந்த எடப்பாடி எல்லா தொழிலையும் முடக்கி போட்டது மட்டுமின்றி எல்லோரையும் முடங்கி கிடக்க செய்தார். பல்லாயிரக்கணக்கான மக்களைதவிக்கவிட்டதை நீங்கள் அறிவீர்கள். கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களை கவச உடையணிந்து நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறிய ஒரே முதலமைச்சர் இந்தியாவில் தளபதியார் மட்டும்தான் பின்னர் படிப்படியாக மக்கள் நலனை கருத்தில்கொண்டு ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்காயிரம் வழங்கினார். கொரானாவில் தனிமைப் படுத்தப்பட்டவர்கள் அரசு மருத்துவமனை மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகள் பள்ளிக்கூடங்கள் மண்டபங்கள் என பல்வேறு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து, ஆயிரக்கணக்கான செவிலியர்களை நியமித்து மக்களை காப்பாற்றியது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். மேலும் நான்காயிரம் திருக்கோவில்களுக்கு கும்பாபிஷேகம் செய்து முதலமைச்சர் ஸ்டாலின் சாதனை படைத்துள்ளார்.

தூத்துக்குடி தொகுதியில் மட்டும் 210 மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளதுடன், 13 துணை நிலை மருத்துவமனைகளும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பல பகுதிகளில் நீண்டகாலமாக இருந்த குடிநீர் தட்டுப்பாடு தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டின் கலாச்சாரம்,மொழி மற்றும் வரலாற்றை பாதுகாக்கும் நோக்கில் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கீழடி உள்ளிட்ட அகழ்வாராய்ச்சி பணிகளில் ஒன்றிய அரசு அனுமதி வழங்காமல் தமிழர்களின் பழமையான நாகரிக வரலாற்றை உலகுக்கு நிரூபிக்கும் ஆய்வுகளை தடுக்க முயற்சி நடக்கிறது. பெரிய நிறுவனங்களின் கடன்களை தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு , விவசாயிகள் மற்றும் சாதாரண மக்களின் கடன்களை தள்ளுபடி செய்ய தயங்குகிறது.

இந்த தேர்தல் போர் தமிழ்நாடு அணிக்கும் டெல்லி அணிக்கும் நடக்கும் போர், தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ் மொழி மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க மீண்டும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைவது அவசியம் என அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகர துணை செயலாளர் கீதா முருகேசன், 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் சந்திரபோஸ், தலைமைக் கழக பேச்சாளர்கள் சரத் பாலா,இருதயராஜ்,வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், மருத்துவர் அணி தலைவர் அருண்குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் பிரபு, பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சின்னதுரை, மாவட்ட பிரதிநிதிகள் ராஜ்குமார், சேர்மபாண்டி, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராபின் அசோகன், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, வட்டச் செயலாளர்கள் கங்காராஜோஷ், சுரேஷ் மகாராஜன், மாரீஸ்வரன், கதிரேசன், பாலகுருசாமி, சிங்கராஜ், காங்கிரஸ் முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், கவுன்சிலர்கள் சந்திரபோஸ், எடின்டா, முன்னாள் கவுன்சிலர் கந்தசாமி மற்றும் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூர்யா,வார்டு நிர்வாகிகள் ராஜ்குமார்,மாரீஸ்வரன், மாரிமுத்து, முத்துக்குமார் கார்த்திக் ராஜா, மணி மற்றும் மகளிரணியினர் கலந்து கொண்டனர்.

DHINATH DHALAM Morning Tamil Daily 08.03.2026



மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு மதுரை விமான நிலையத்தில் கலெக்டர் கே.ஜே.பிரவீன் குமார் புத்தகம் வழங்கி வரவேற்றார்.



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள பெரும்பேர்கண்டிகை கிராமத்தைச் சார்ந்த தரு.லட்சுமணன் இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சுமார் பல ஆண்டுகளாக இயக்க பணிபாற்றி வரும் இவர் கடந்த தேர்தலில் 2011. 2016. 2021. தேர்தலிலும்விருப்பமனுதாக்கல்செய்தாலும்அதனைத்தொடர்ந்துதற்போதுகாஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் அவர்களின் நல்லாசியுடன் சென்னையில் அமைந்துள்ள திமுக தலைமை கழகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மதுராந்தகம் தனித் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு மற்றும் கட்டணத் தொகையாக ரூபாய் 15 ஆயிரம் செலுத்தி மனு தாக்கல் செய்தார் உடன் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய நிர்வாகிகள் பெரும்பேர் கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர் தலைமையில். பாபுராயன் பேட்டை கருணாகரன். சிறுபேர்பாண்டி ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர். துரைகணேஷ். கண்ணன் வீரராகவன். உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (6.3.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 அனைத்து மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வாக்களிக்க ஊக்குவித்தல் தொடர்பாக மாற்றுத்திறனாளி உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, வட்டாட்சியர் (தேர்தல்) சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.



மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (07.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மகளிர் தினவிழா 2026ல் கேக் வெட்டி மகளிர்களுக்கு வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்து, பேசினார். இவ்விழாவில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ. சுஜாதா, உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி உட்பட அனைத்து துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா அவர்கள் தமிழ்வளர்ச்சி துறையின் சார்பில் நடைபெற்ற குறள்வார விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்கள். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா அவர்கள் தமிழ்வளர்ச்சி துறையின் சார்பில் நடைபெற்ற குறள்வார விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்கள்.



பேராசிரியர் க. அன்பழகன் 6வது நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ,மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு பெரியார் நகர் முகாம் அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு உள்ள பேராசிரியர் க.அன்பழகன் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் .அதனைத் தொடர்ந்து மாவட்ட கழக அலுவலகத்திலும் மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது .இந்நிகழ்வில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மற்றும் கழக மாநில,மாவட்ட, மாநகரக் கழக ,பகுதி கழக ,வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (6.3.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பாக சட்டமன்ற தொகுதி வாரியாக நியமனம் செய்யப்பட்ட முதன்மை பயிற்சியாளர்களுக்கு, மாநில அளவிலான முதன்மைப் பயிற்சியாளர்கள் பயிற்சியளிப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (07.03.2026) நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மகளிர் தினவிழா 2026ல் கேக் வெட்டி மகளிர்களுக்கு வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இவ்விழாவில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி காஞ்சன் சௌதரி ,திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி உட்பட அனைத்து துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் பெருந்துறை வட்டாரத்திலுள்ள 10 அரசு பள்ளிகளில் கல்வி 40 டிஜிட்டல் திட்டத்தை தொடங்கி வைத்தார்




*ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (07.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் பெருந்துறை வட்டாரத்திலுள்ள 10 அரசு பள்ளிகளில் கல்வி40 டிஜிட்டல் திட்டத்தை தொடங்கி வைத்தார்.*

*கல்வி 40 டிஜிட்டல் திட்டம் என்பது தமிழ்நாடு அரசின் கல்வித் துறையால் செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடி திட்டமாகும். இதன் மூலம் அரசுப் பள்ளிகளில் டிஜிட்டல் வசதிகள் மேம்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான கல்வி அளிக்கப்படுகிறது. இதன் மூலம், கல்வித்தரத்தை உயர்த்துவதற்கும், டிஜிட்டல் இடைவெளியை குறைப்பதற்கும் டிஜிட்டல் கற்றலுடன் மட்டுமல்லாமல், குழந்தைகளின் மொழித்திறன் மற்றும் முழுமையான வளர்ச்சி மேம்படவும் உதவும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம், மாணவர்களுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான கல்வி அளிக்கப்பட உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில், முதன்மைக் கல்வி அலுவலர் டாக்டர்.இ.மான்விழி, மாவட்ட கல்வி அலுவலர் வி.பரமசிவம், உதவித் திட்ட அலுவலர் இரவிச்சந்திரன், Techno Sportswear Pvt Ltd (CSR Sponsor) நிர்வாக இயக்குநர் திரு.சுனில் ஜுன்ஜுன்வாலா, BumbleB Trust நிறுவனர் ப்ரேம்குமார் கோகுலதாசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



தூத்துக்குடி வருகை தந்த கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வு குழு தலைவர்,தலைமை செயற்குழு உறுப்பினர் G.V.மார்கண்டேயன் வரவேற்றார்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் "ஸ்ரீஅன்னை ஜேகேகே சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியின் துணை முதல்வர் எஸ். ராமசாமி அவர்களின் நீண்டகால கல்வி மற்றும் சமூகத்தின் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "தங்கமகன்" விருது மாவட்ட செயலாளர் டாக்டர் G. தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

## ஈரோட்டில் 'சொல்லின் செல்வர்' ஈ.வி.கே.சம்பத் நூற்றாண்டு விழா:

## திருவுருவச் சிலைக்கு மாவட்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் அரிமா. அன்பழகன் மலர் தூவி மரியாதை



*ஈரோடு: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், 'சொல்லின் செல்வர்' என்று போற்றப்படுபவருமான ஈ.வி.கே.சம்பத் அவர்களின் 100-வது பிறந்தநாள் நூற்றாண்டு விழா ஈரோட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள சம்பத் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் அரிமா. அன்பழகன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.திராவிட இயக்கத்திலும், பின்னர் காங்கிரஸ் பேரியக்கத்திலும் முக்கியத் தூணாக விளங்கிய ஈ.வி.கே.சம்பத், தனது கணீர் குரலாலும்,ஆழமான கருத்துக்களாலும் அறிஞர் அண்ணாவால் 'சொல்லின் செல்வர்' எனப் புகழப்பட்டவர்.*

*அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்வில், மறைந்த தலைவரின் அரசியல் ஆளுமை மற்றும் மக்கள் நலனுக்காக அவர் ஆற்றிய அரும்பணிகள் நினைவு கூரப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு அவருக்குப் புகழ் வணக்கம் செலுத்தினர். மேலும், ஈ.வி.கே. சம்பத் அவர்களின் கொள்கைகளையும் தியாக வரலாற்றையும் இன்றைய இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என இந்த நிகழ்வின் போது வலியுறுத்தப்பட்டது.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.